

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.5.2025) சென்னையில் நடைபெற்ற வேல்ஸ் பல்கலைக்கழகத்தின் நிறுவனர் வேந்தர் டாக்டர் ஐசரி கே. கணேஷ் அவர்களின் மகள் பிரீத்தா கணேஷ் – லஷ்வின் குமார் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. ராஜேந்திரன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (10.5.2025) இந்திய இராணுவத்திற்கு துணை நிற்கும் பேரணியின் முடிவில், காமராசர் சாலையில் உள்ள போர் நினைவுச் சின்னத்தின் அருகில் வைக்கப்பட்டிருந்த, நாட்டிற்காக உயிர் தியாகம் செய்த இராணுவ வீரர்களின் திருவுருவப்படங்களுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி மேயர் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசியல் கட்சித் தலைவர்கள், தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசு உயர் அலுவலர்கள், காவல்துறை தலைமை இயக்குநர் உள்ளிட்ட காவல் துறை உயர் அலுவலர்கள், முன்னாள் படைவீரர்கள், அனைத்து மத தலைவர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் உடனிருந்தனர்.

# நல்லாட்சியின் நான்காண்டு நிறைவு

# ஐந்தாம் ஆண்டு தொடக்கத்திற்கு வாழ்த்துரைத்தேன்!



மாண்புமிகு முதலமைச்சர்
மு.க.ஸ்டாலின் அவர்களை
முகாம் அலுவலகத்தில்
சந்தித்தேன்

நல்லாட்சியின்
நான்காண்டு நிறைவுக்கும்
ஐந்தாம் ஆண்டுத்
தொடக்கத்திற்கும்
பொன்னாடை பூட்டி
வாழ்த்துரைத்தேன்

25 மணித்துளிகள்
உரையாடினோம்

பல செய்திகள்
அவர் காதுகளுக்குப்
போவதில்லை என்று
கணக்குப் போடாதீர்கள்

அறிய வேண்டிய
அரிய செய்திகள்
பலவற்றையும் அவர்
அறிந்து வைத்திருக்கிறார்

உளவுத்துறை என்பது
அவருக்குக் காவல்துறையில்
மட்டுமில்லை; எல்லாத்
துறைகளிலும் இருப்பதாய்
உதட்டுக்குத் தெரியாமல்

புன்னகைத்துக் கொண்டேன்
இந்திய ராணுவத்தின்
ஆதரவுப் பேரணிக்குப்
பாராட்டுத் தெரிவித்தேன்

செயல் வேகத்தில்
கலைஞரைத் தாண்டுகிறார்
என்பதைச் சொல்லத்
தயக்கமில்லை எனக்கு

“நாடும் வீடும்
நன்கு விளங்க
முதலமைச்சரும்
நலம்வாழ வேண்டும்”

வாழ்த்தி விடைகொண்டேன்

**- கவிப்பேரரசு வைரமுத்து**

# தி.மு. கழகத்தில் சிறுவயதிலேயே தன்னை இணைத்துக் கொண்டு சிறப்பாகப் பணியாற்றி வருபவர் செயல்வீரர் சித்திக்!

## பொள்ளாச்சி சித்திக் – எம்.ஆயிஷா இணையர் மணவிழா! துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நடத்தி வைத்து வாழ்த்து!

**சென்னை, மே 12-**

**கழக செய்தித்தொடர்புத் துணைச் செயலாளர் பொள்ளாச்சி சித்திக் - எம். ஆயிஷா இணையரின் திருமணத்தை, சென்னை எழும்பூர் பெரியார் திடலில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நடத்தி வைத்தார்.**





அப்போது அவர், “தலைமைக் கழகப் பேச்சாளராக மேடைகளில் கழகத்தின் கருத்துகளை எடுத்துரைத்து வந்த தம்பி சித்திக், ஊடகங்கள் மற்றும் இணையவெளியிலும் கழகம் மற்றும் திராவிட மாடல் அரசின் சாதனைகளை எடுத்துச் சொல்லி வலுசேர்த்து வருகிறார். இல்வாழ்வில் அடியெடுத்து வைக்கும் அவரும் அவருடைய வாழ்விணையரும், கழகமும் கலைஞரும் போல, நம் முதலமைச்சரும் வெற்றிகளும் போல திராவிடமும் சிறுபான்மையின மக்களும் போல ஒற்றுமையோடு பல்லாண்டு வாழ்க” என வாழ்த்தினார்.

விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வாழ்த்துரை வருமாறு:-

அருமைச் சகோதரர் பொள்ளாச்சி சித்திக், சகோதரி ஆயிஷா இணையரின் திருமண விழாவில் பங்கேற்று மணமக்களை வாழ்த்துவதற்கான வாய்ப்பை அளித்ததற்காக சித்திக் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கி றேன்.

கழகத்தில் சிறுவயதிலேயே தன்னை மாணவனாக இணைத்துக் கொண்டு கழகத்திற்காக உழைத்து, கழக மேடைகளில் பேசி, பல்வேறு பணிகளை ஆற்றி இன்று மாநில அளவில் ஒரு மிகப்பெரிய பொறுப்பில் சகோதரர் சித்திக் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறார்.

**முதல் பரிசு வென்றவர்!**

கழகத்தில் தன்னை இணைத்துக் கொள்கின்ற அனைத்து இளைஞர்களுக்கும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக சகோதரர் சித்திக் அவர்கள் விளங்கிக்கொண்டு இருக்கிறார். அதை ஏன் இன்று சொல்கிறேன் என்றால், பல வருடங்களுக்கு முன்பு கழகத்தலைவர் நம் முதலமைச்சர் அவர்கள் இளைஞர் அணிச் செயலாளராக இருந்தபோது நடத்திய பேச்சுப்போட்டியில் மாநிலத்திலேயே முதல் பரிசு வென்றவர்தான் சகோதரர் சித்திக் அவர்கள்.

சிறந்த பேச்சாளராக கண்டெடுக்கப்பட்ட சித்திக் அவர்கள் கழகத்தின் பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றி இன்றைக்கு செய்தி தொடர்பின் துணைச் செயலாளராக பணியாற்றி வருகிறார். பேச்சுப் போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர் இன்றைக்கு நம் இளைஞர் அணி நடத்துகின்ற கலைஞரின் நூற்றாண்டு பேச்சுப் போட்டியில் நடுவராக கலந்துகொண்டு சிறப்பித்தார். எந்தப் பேச்சுப் போட்டியில் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டாரோ, அதே பேச்சுப் போட்டியில் ஒரு நடுவராக தமிழ்நாடு முழுவதும் பயணம் செய்து இன்று பல்வேறு இளம் பேச்சாளர்களை அவர் கழகத்திற்காக தேர்ந்தெடுத்து கொடுத்திருக்கிறார்.

**மணமக்களுக்கு வாழ்த்து!**

சகோதரர் சித்திக்கின் கழகப் பணி என்றும் தொடர வேண்டும் என்று கூறிக்கொண்டு, உங்கள் அனைவரின் சார்பாகவும், கலைஞர் குடும்பத்தின் சார்பாகவும், நம் கழகத் தலைவரின் சார்பாகவும் மணமக்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

பங்கேற்றவர்கள்: அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் பரந்தாமன், டாக்டர் எழிலன், கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன், மாணவர் அணிச் செயலாளர் ராஜீவ் காந்தி, தென்றல் செல்வராஜ், அமுதபாரதி, மாணவர் அணியின் மாநில துணைச் செயலாளர்கள் வீரமணி, கோகுல் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

### ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், இளைஞர் அணி மாவட்ட–மாநகர–மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி, இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி இழைக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து, கீழ்காணும் சட்டமன்றத் தொகுதிகளில் மாபெரும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது. அதன் விவரம் வருமாறு:

| வ. எண் | நாள் | கழக மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 15.05.2025 | திண்டுக்கல் கிழக்கு | ஆத்தூர் | அகரம் தாடிக்கொம்பு பேரூராட்சி | வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, செல்வக்குமார் |
| 2 | 16.05.2025 | திண்டுக்கல் மேற்கு | ஒட்டன்சத்திரம் | கள்ளிமந்தையம் | வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, மில்லர் மண்டேலா |
| 3 | 17.05.2025 | வேலூர் | வேலூர் | அண்ணா கலையரங்கம் அருகில் | வழக்கறிஞர் தாயகம் கவி, ரிஷி சந்தோஷ் |
| 4 | 18.05.2025 | வேலூர் | குடியாத்தம் | பேரணாம்பட்டு பேருந்து நிலையம் அருகில் | மாண்புமிகு கோவி.செழியன், ம.ஜ.சந்தீப் |
| 5 | 18.05.2025 | நீலகிரி | உதகை | கூக்கல்தொரை | மருத்துவர் ப.மீ.யாழினி, சி.கா.சுகன்மந்த்ரன் |

### ஒன்றிய-நகர-பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

தேனி தெற்கு மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 15.05.2025 வியாழக்கிழமை | காலை 10.00 மணி | இராமநாதபுரம் | பீமாஸ் வைஸ்ராய் ஹால், பாரதி நகர், இராமநாதபுரம். |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 10-05-2025

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி